**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 65/2018 Date:04.07.2025**

**(P.W.1)- Suresh**

<u>**4** முதல் **8** பிரதிவாதிகள் தரப்பு **குறுக்கு விசாரணை**</u>

**1**. இந்திய அரசியலமைப்பு சட்டப்படி அனைவருக்கும் மத சுதந்திரம் உண்டு என்றால் சரிதான். சரத்து 19 ன் படி இந்திய குடிமகனுக்கு சுதந்திரமாக சிந்திப்பதற்கும் சங்கங்களையும் அமைப்புகளையும் ஏற்படுத்தவும் சொத்துகளை வாங்கவும் விற்கவும் அவர்கள் எந்த தொழில்/ பணியில் ஈடுபடவும் உரிமையுள்ளதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். சரத்து 25ன் படி இந்திய குடிமகனின் வழிப்பாட்டு சுதந்திரத்தை பற்றியும் கூறியுள்ளது என்றால் சரிதான். பொது ஒழுங்கு , ஒழுக்கம் மற்றும் நலவாழ்வு ஆகியவற்றிற்கும் தனது மனசாட்சிப்படி செயல்படுவதற்கும் தாம் சார்ந்திருக்கும் மதத்தை தழுவவும் அதை பரப்பவும் உரிமையுள்ளது என்று சரத்து 25 ல் கூறியுள்ளது என்றால் அது பற்றி எனக்குதெரியாது. சரத்து 26 ல் மதத்திற்காகவும் அறங்களுக்காகவும் அமைப்புகளை உருவாக்கவும் அமைப்பதற்கும் பராமரிப்பதற்கும் சொத்துகளை சட்டப்படி நிர்வாகம் செய்வதற்கும் உரிமை வழங்கியுள்ளது என்றால் சரிதான். மேற்படி அரசியலமைப்பு சட்டம் தான் சரத்து 14 ன் படி அனைவரும் சட்டத்திற்கு முன்பு சமம் என்று கூறுகிறது என்றால் சரிதான்.

**2**.பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்காமல் அனைத்தையும் செய்ய அரசியலமைப்பு சட்டத்தின் படி உரிமை வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கை எந்த நோக்கத்திற்காக தாக்கல் செய்துள்ளளேன் என்றால் உடையார் விளை என்ற இடத்தில் குருசடியை அமைத்து மதமாற்றம் செய்வதாக தெரிந்ததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் இந்த வழக்கை எனக்காகவும் , உடையார் விளை கிராம மக்களுக்காகவும் தாக்கல் செய்துள்ளேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால்

சரிதான். நான் இந்த வழக்கை தாக்கல் செய்யும் போது எங்கள் ஊரில் எந்த பொறுப்பில் இருந்தேன் என்றால் எந்த பொறுப்பிலும் இல்லை. நான் ஊருக்காக வழக்கை தாக்கல் செய்ய எனக்கு யார் அதிகாரம் கொடுத்துள்ளார்கள் என்றால் யாரும் கொடுக்கவில்லை.

**3**. இந்த வழக்கில் யாரை நான் பிரதிவாதியாக சேர்த்துள்ளேன் என்றால் 3 நபர்களான பவுலோஸ் ராஜன், ஜான் ரோஸ், Susai ஆகியோரை பிரதிவாதிகளாய் சேர்த்துள்ளேன், மேற்படி 3 நபர்களும் உடையார் விளை ஊரை சார்ந்தவர்கள். தாவா வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து பட்டா நிலம் தான் என்றால் சரிதான். மேற்படி நிலம் யாருக்கு உரிமைப்பட்டது என்றால் மேற்படி 3 நபர்கள் பேரில் உள்ளது. தாவா சொத்து புனித அன்னை தெரசா நற்பணிமன்றம், உடையார் விளை என்ற பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி நற்பணிமன்றத்தின் செயலாளரான 3 ம் பிரதிவாதி தாவா இடத்தில் வணிக வளாகம் கட்டுவதற்கு 4 ம் பிரதிவாதியான கல்லுக்கூட்டம் பேரூராட்சியில் அனுமதி கோரியுள்ளார் என்றால் சரியல்ல.

**4**. மதுரை உயர்நீதிமன்றத்தில் WP(MD) 21262/2023 என்ற வழக்கில் தாவா சொத்தாகிய கல்லுக்கூட்டம் கிராமம், புதிய சர்வே எண் 527/12 ல் வணிக கட்டிடம் கட்டுவதற்காக வேண்டி 4ம் பிரதிவாதியிடம் வரைப்பட அங்கீகாரம் கொடுக்க வேண்டும் என்று இந்த வழக்கின் 3 ம் பிரதிவாதி வழக்கு தொடுத்துள்ளதாகவும் அந்த வழக்கில் 8 வாரங்களுக்குள் ஒரு இறுதி முடிவு எடுக்க வேண்டும் என்று மதுரை உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதை பற்றி எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் முதல் விசாரணையில் 2 மற்றும் 3 பிரதிவாதிகள் கிறிஸ்தவ வழிப்பாட்டு கூடத்தை கட்ட ஆரம்பித்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

**5.** மேற்படி கட்டிடம் வழிபாட்டு தலத்திற்காக தான் கட்டுகிறார்கள் என்ற விவரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் 1 முதல் 3 பிரதிவாதிகளின் உடனிருக்கும் ஜார்ஜ் ஹார்ட்வேர்ஸ் உரிமையாளர் கூறினார். முதல் விசாரணையில் வழக்கு பட்டிகை சொத்தில் புதிய தேவாலய கட்டுமானம் தேவையற்றது என்றும் சட்டவிரோதமானது

என்றும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எதனடிப்படையில் சட்டவிரோதம் என்றும் தேவையற்றது என்றும் கூறியுள்ளேன் என்றால் மதமாற்றம் செய்வதால் அவ்வாறு கூறியுள்ளேன். எனது வழக்கில் யார் மதமாற்றத்தில் ஈடுபட்டார்கள் என்பது பற்றி குறிப்பிடவில்லையென்றால் சரிதான்.

**6.** எனது ஊர் அமைதியான ஊர் என்றால் சரிதான். எதனடிப்படையில் என் ஊரில் மத மோதல் ஏற்படும் என்று கூறியுள்ளேன் என்றால் மதமாற்றத்தின் அடிப்படையில் கூறினேன். மதமாற்றம் செய்வது தொடர்பான எந்த ஆவணமும் இந்நீதிமன்றத்தில் தாக்கல்செய்யவில்லையென்றால் சரிதான். இந்திய நாட்டில் அவரவர் மதத்தையும் நம்பிக்கையையும் போற்றி பாதுகாக்க உரிமையுள்ளதால் நான் மத மோதல் ஏற்படும் என்று அனுமானத்தில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. மதவழிபாட்டுத்தலம் கட்டுகிறார்கள் என்பதையும் நான் அனுமானத்தின் அடிப்படையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு அனுமானத்தில் அடிப்படையில் வழக்கை தாக்கல் செய்ததால் தான் மதமாற்றம் தொடர்பான சான்றாவணங்களை தாக்கல் செய்யவில்லையென்றால் சரியல்ல.

**7.** முதல் விசாரணையில் Venugopal அறிக்கையில் அருகருகே மதவழிபாட்டுத்தலங்கள் அமைவதை தடைச்செய்ய பரிந்துரை செய்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி அறிக்கையில் ஒரு வழிபாட்டு தலத்திற்கும் மற்றொரு வழிபாட்டு தலத்திற்கும் எவ்வளவு இடைவெளி இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், 3 கிலோமீட்டர் இடைவெளி ஆகும். நான் மாவட்ட நிர்வாகம் சட்ட விரோத செயலை தடுத்து நிறுத்தவில்லையென்று குறிப்பிட்டுள்ள சட்ட விரோத செயல் எது என்றால் மதமாற்றம் செய்வது. எனது பிராதில் எனது ஊரில் அமைதி குறைவு ஏற்பட்டது என்று குறிப்பிடவில்லையென்றால் சரிதான்.

**8.** 4 ம் பிரதிவாதியிடம் 3 ம் பிரதிவாதி வணிக வளாகம் மட்டும் கட்ட அனுமதி கோரினார் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கிற்காக பொது அமைதிக்கு பங்கம்

ஏற்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தான் அனுமானத்தின்அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல செய்துள்ளேன் என்றாலும் அனுமானத்தின் அடிப்படையில் கோரியுள்ள பரிகாரம் ஏற்கத்தக்கது அல்ல , அது சட்டப்படி கிடைக்கக்கூடியதும் அல்ல , ஏனென்றால் 4 ம் பிரதிவாதியிடம் வழிபாட்டு தலம் கட்டுவதற்காகவோ வேறு சட்ட விரோத செயல்களுக்கோ அனுமதி கோரவில்லையென்றால் சரியல்ல.

**9.** நற்பணிமன்றத்தின் சார்பாக மக்களுக்கு தொண்டு செய்ய வேண்டி தான் அனுமதி கோரினார்கள் என்றால் சரியல்ல. நான் அரசையும் அரசு அதிகாரிகளையும் தேவையில்லாமல் இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றாலும் பிரதிவாதிகள் மக்களின் நன்மைக்காக செயல்படும் போது சட்டம் ஒழுங்கிற்கு தீங்கு ஏற்படாத போது அரசு எந்த நடவடிக்கையும் எடுக்க அவசியமில்லையென்றாலும் நான் மதப்பிரிவினை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. என்னுடைய வழக்கு பிரதிவாதிகள் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

( ஒப்பம் )

மாவட்ட உரிமையியல் நீதிபதி

இரணியல்